NATIONAL ARTS COUNCIL
SINGAPORE

# திறன் மேம்பாட்டு நிதியுதவித் திட்டம்

## பொருளடக்கம்


பகுதி 1 திறன் மேம்பாட்டு நிதியுதவித் திட்டத்தின் மேலோட்ட விவரங்கள் 2

பகுதி 2 தகுதி 10

பகுதி 3 விண்ணப்பம் மற்றும் பரிசீலனை முறை 12

பகுதி 4 உங்களுக்குத் திறன் மேம்பாட்டு நிதியுதவி வழங்கப்பட்டால் 15

பின்னிணைப்பு A: அறிவுரையளிப்பு, தொழில் பயிற்சியாளர், வேலையிலேயே கற்றுக்கொள்ளல் ஆகியவற்றுக்கான எடுத்துக்காட்டுகள் 17

பின்னிணைப்பு B: மதிப்பீட்டு அறிக்கைகளுக்கான வழிகாட்டிக் கேள்விகள் 18


Document last updated on 31 March 2016

# பகுதி 1: திறன் மேம்பாட்டு நிதியுதவித் திட்டத்தின் மேலோட்ட விவரங்கள்

**திறன் மேம்பாட்டு நிதியுதவித் திட்டம் எதற்கெல்லாம் உதவி செய்யும்?**

சிங்கப்பூரின் கலை, கலாசாரத் துறைகளில் பணியாற்றும் கலைஞர்கள், கலை நிறுவனங்கள், இதர நிபுணர்கள் ஆகியோரின் திறன் மேம்பாட்டுக்கு கீழ்க்கண்ட பயிற்சிகள், திட்டங்களுக்கு உதவி பெறலாம்:

| | தனிநபர் | நிறுவனம் |
|---|---|---|
| • தொழில்முறைப் பயிற்சி, திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்;<br>• பயிலரங்குகள், பயிற்சிகள், மாநாடுகள், ஆய்வரங்கங்கள்<br>• தொழில்முறைத் திட்டங்கள் (உ.தா. சான்றிதழ் அல்லது தொழில்முறைப் பட்டயக் கல்வி உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட கல்விகள் )<br>• தங்கியிருந்து பணியாற்றும் வாய்ப்புகள்<br>• போட்டிகளில்[1] பங்கேற்பது | பங்கேற்பு மட்டும் | ஊழியர்கள் அல்லது உறுப்பினர்கள் [2] பங்கேற்க அல்லது பணியிடப் பயிற்சிகள் உள்ளிட்ட பயிற்சிகள் வழிகாட்டும் திட்டங்கள், தொழில் கற்றல் திட்டங்களுக்கு ஏற்பாடு செய்வது |
| • பணி சார்ந்த பயிற்சிகள்:<br>• பணிசார்ந்த இணைப் பயிற்சிகள்<br>• பணியிடப் பயிற்சிகள் அல்லது பயிற்சிகள் | பங்கேற்பு மட்டும் | ஊழியர்கள் அல்லது உறுப்பினர்கள் பங்கேற்க அல்லது பணியிடப் பயிற்சிகள் உள்ளிட்ட பயிற்சிகள் வழிகாட்டும் திட்டங்கள், தொழில் கற்றல் திட்டங்களுக்கு ஏற்பாடு செய்வது |

[1] பயிலரங்குகள், பயிற்சிகள் போன்ற தொழில்முறை மேம்பாட்டுக்கேற்ற வாய்ப்புகள் உள்ள போட்டிகளில் பங்கேற்பது; போட்டிகளை நடத்தத் திட்டமிடும் நிறுவனங்கள் படைப்பு, பங்கேற்பு நிதியுதவிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

[2] துறை சார்ந்த திறன் வேற்றுமைகளை இட்டுநிரப்பக்கூடிய பயிற்சி நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்ய விரும்புவோர் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| • வழிகாட்டும் திட்டங்கள், தொழில் கற்றல் திட்டங்கள் (கூடுதல் தகவலுக்கு பின்னிணைப்பு A-ஐப் பார்க்கவும்) | பங்கேற்பு அல்லது வழிகாட்டும் திட்டங்கள், தொழில் கற்றல் திட்டங்களுக்கு ஏற்பாடு செய்வது | ஊழியர்கள் அல்லது உறுப்பினர்கள் பங்கேற்க அல்லது பணியிடப் பயிற்சிகள் உள்ளிட்ட பயிற்சிகள் வழிகாட்டும் திட்டங்கள், தொழில் கற்றல் திட்டங்களுக்கு ஏற்பாடு செய்வது |

**முன்னுரிமைப் பட்டியல்**

கலைத் தொழிலில் பல்வேறு துறைகளில் பலவற்றை தொடர்ந்துகொள்வதையும் கற்றுக்கொள்வதையும் நாங்கள் ஆதரித்தாலும், நமது கலைச் சூழலில், பின்தங்கியிருப்பதாகவோ அல்லது அவசியமானதாகவோ அடையாளம் காணப்பட்ட பின்வரும் துறைகளில் நாங்கள் சிறப்பு கவனமளித்து, அவைகளுக்கு முன்னுரிமை அளிக்கிறோம்:

- கல்வியை மையமாகக் கொண்ட, சமூகங்களுடன் மற்றும்/அல்லது இளையருடன் சேர்ந்து செயல்படும் கலைத் தொழில் (எ.கா. ஊக்கத்துணை மற்றும் கற்பிக்கும் முறை)
- சிங்கப்பூரின் சீன, மலாய் மற்றும் இந்தியப் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் பாரம்பரியக் கலை வடிவங்களை மையமாகக் கொண்ட கலைத் தொழில்கள்
- காண்கலை பொறுப்பாளுமை, கலை கையாளுமை
- இலக்கிய வெளியீடு, தொகுப்பு, மொழிப்பெயர்ப்பு மற்றும் புத்தாக்க எழுத்துகள்
- தொழில்நுட்பத் தயாரிப்பு வடிவமைப்பு, நிர்வாகம் மற்றும் தொழில்நுட்பமுள்ள கலைகள்
- கலை நிர்வாகம் (தொழில் நிர்வாகம், தலைமை உட்பட)
- கலை ஆய்வு, கல விமார்சனம் மற்றும் ஆவணப்படுத்துதல்

* தேசிய கலை மன்றம் இந்த முன்னுரிமைப் பட்டியலை அவ்வப்போது மறுஆய்வு செய்யும். நடவடிக்கைகள், திட்டங்களுக்கான திறன் மேம்பாட்டு நிதியுதவி தொடர்ந்து 12 மாதங்களுக்கு மிகாமல் அளிக்கப்படும்.

**திறன் மேம்பாட்டு நிதியுதவி ஆதரிக்காத நடவடிக்கைகள்**

- தொடர்ந்து இயங்கும் கலைஞர்கள், கலைத்துறை ஊழியர்களுக்கு தொடர்பில்லாத, உதவாத நடவடிக்கைகள்
- கல்வி அமைச்சின் மானியம் பெறும் மேல்நிலைக் கல்வித் திட்டங்கள் (உதாரணம்: NITEC, Higher NITEC, பட்டையக் கல்வி, பட்டக்கல்வி).
- முழுநேரப் பட்டக்கல்வி (உதாரணம்: இளங்கலைப் பட்டக்கல்வி, முத்நிலைப் பட்டக்கல்வி அல்லது முனைவர்). அது போன்றக் கல்விக்கான உதவி தேவைப்படுவோர் தேசிய கலை மன்றத்தின் உபகாரச் சம்பளத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும்.
- தேசிய கலை மன்றத்தின் மற்ற திட்டங்கள், நிதியுதவிகளின் கீழ் உதவி பெறும் நடவடிக்கைகள்
- ஊழியரணி மேம்பாட்டு நிறுவனம் உள்ளிட்ட பிற அரசாங்கத் திட்ட மானியங்களின் கீழ் உதவிபெறும் நடவடிக்கைகள்
- ஏற்கெனவே தொடங்கப்பட்டு நடந்து கொண்டிருக்கும் நடவடிக்கைகள்

***திறன் மேம்பாட்டுக்கு தேசிய கலை மன்றம் எவ்வாறு ஆதரவளிக்கிறது?***

தேசிய கலை மன்றம் 3 முக்கிய வழிகளில் உங்கள் திறன் மேம்பாட்டுக்கு ஆதரவளிக்கிறது:

1. **உபகாரச்சம்பளம்**

   கலை, கலாசாரத் துறையில் ஆக்கபூர்வமான மாற்றங்களை வழிநடத்துவதில் முனைந்து செயல்பட தலைசிறந்த தனி நபர்களுக்கு தேசிய கலை மன்றம் உபகாரச் சம்பளம் அளிக்கிறது. மேலும், இவர்கள் கலைத் தொழில் அல்லது நிர்வாகத்துடன் தொடர்புள்ள, முழுநேர, இளநிலை அல்லது முதுநிலை பட்டக்கல்வி பயிலுபவர்களாக இருக்க வேண்டும். தேசிய கலை மன்றத்தின் உபகாரச்சம்பளங்கள் பற்றிய மேல்விவரங்கள் அறிய, www.nac.gov.sg/scholarships என்னும் இணையதளத்தைப் பார்க்கவும்.

**பயிற்சித் திட்டங்களும் கூட்டாண்மைகளும்**

கலை நிர்வாகம், கலைக் கல்வி, காப்பாளுமை, தொழில்நுட்பமுள்ள நாடக அரங்கம் போன்ற துறைகளில் பயிற்சிக் கழகங்களுடன் சேர்ந்து தேசிய கலை மன்றம், பயிற்சித் திட்டங்களை உருவாக்குகிறது. அதோடு, பயிற்சி பெறுபவரின் வேலைக்கான சம்பளம், பயிற்சிக் கட்டணம் ஆகியவற்றுக்கும் ஆதரவளிக்கிறது. உங்கள் கலைத்தொழில் சார்ந்த பயிற்சித் திட்டங்கள் பற்றிய மேல்விவரங்கள் அறிய www.nac.gov.sg/training என்னும் இணையதளத்தைப் பார்க்கவும்.

கலைத்துறைக்குத் திறன் மேம்பாட்டுத் தளங்களையும் திட்டங்களையும் வழங்க விரும்பும் நிறுவனங்களுடன் கூட்டாண்மை அமைக்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம். கலைத்துறையில் நிலவும் திறன் பற்றாக்குறையைத் தீர்த்து வைக்கக்கூடிய, கட்டமைக்கப்பட்ட மற்றும் தீவிரமான தளங்களையும் அல்லது திட்டங்களையும் மேம்படுத்த மற்றும்/அல்லது அமைக்க ஆதரவளிப்பது குறித்து மட்டுமே நாங்கள் பரிசீலிப்போம். பயிற்சிக் கூட்டாளியிடம் என்னென்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பது பற்றி மேல்விவரங்கள் அறிய உங்களுக்கு ஆர்வமிருந்தால், தயவுசெய்து தேசிய கலை மன்ற அதிகாரிகளில் ஒருவருடன் பேசவும்.

2. **திறன் மேம்பாட்டு நிதியுதவி**

இந்த நிதியுதவி உங்களது நிபுணத்துவ மேம்பாட்டுக்கு எவ்வாறு ஆதரவளிக்கும் என்பதை அறிய தொடர்ந்து படிக்கவும்!

திறன் மேம்பாட்டு நிதி எந்தக் கட்டம் வரை நிதியுதவி வழங்கும்?

| | தனிநபர் | லாப நோக்கம் இல்லாத அல்லது குழு நிறுவனங்கள் | லாப நோக்கம் கொண்ட நிறுவனங்கள் |
|---|---|---|---|
| நிதியுதவி கிடைக்கக்கூடிய செலவு விகிதங்கள் | 70% வரை | 70% வரை | 30% வரை |
| நிதியாண்டின் உச்சபட்சத் தொகை | $20,000 | $75,000 | $75,000 |

# திறன் மேம்பாட்டு நிதியுதவித் திட்டம் எந்தெந்த செலவுகளுக்கு ஆதரவளிக்கும்?

1. ஊழியர்கள்/உறுப்பினர்களை பயிற்சி நடவடிக்கை/திட்டத்திற்கு அனுப்பத் திட்டமிடும் தனிநபர் அல்லது நிறுவனங்களுக்கு

   - **பயிற்சி/பயிலரங்குக் கட்டணம்**
     பயிற்சிக் கட்டணம், பயிலரங்குக் கட்டணம், மாநாட்டுக் கட்டனம், போட்டிப் பதிவுக் கட்டணம் ஆகியவை இதில் அடங்கும். கற்றல் நோக்கங்களுக்குப் பொருத்தமாக இருப்பின், திட்டத்தில் பட்டியலிடப்பட்டிருக்கும் இணைத் திட்டங்களுக்கான செலவும் ஆதரவு பெறலாம்

   - **மேற்பார்வையாளர்/வழிகாட்டியின் மதிப்பூதியம்**
     நடவடிக்கை அல்லது திட்டத்தில் கற்றலுக்கு உதவும் தொழில்முறை வழிகாட்டியை நீங்கள் நியமித்துக்குக் கொள்ள ஒரு குறிப்பிட்ட தொகை இது.

   - **பயிற்சிக்கான பொருட்கள் வாங்கும் செலவு**
     புத்தகங்கள், கலைப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்கள் நடவடிக்கை/ திட்டத்துக்குத் தேவைப்படும் என்று காட்ட வேண்டும். தேவைப்படும் இடத்தில் பயிற்சி ஏற்பாட்டாளர்கள் வெளியிட்டிருக்கும் பட்டியலை துணை ஆவணமாக சமர்ப்பிக்கவும்.

   - **வளாக, கருவிகள் வாடகை**
     குறிப்பிட்ட வளாகத்திற்கான/கருவிகளுக்கான சிறப்புத் தேவையை மேற்பார்வை அல்லது பயிற்சி நடவடிக்கை/ திட்டத்துக்குத் தேவைப்படும் என்று காட்ட வேண்டும். அத்துடன், வெளியிடப் பயிற்சிக்கு அனுப்பும் நிறுவனங்களுக்கும்.

   - **நிறுவனப் பணியில் உள்ள ஊழியர் பணிக்குச் செல்லாததற்கான ஈட்டுத் தொகை**
     தொடந்து பணியில் நீடிக்கும் ஊழியர் பயிற்சியில் ஈடுபடும் காலத்தில் பணிக்குச் செல்லாததற்கான ஈட்டுத் தொகை அந்த ஊழியரின் மாத, மணிநேர ஊதியத்தில் 70% வரைக்கும் அல்லது மணிநேர ஊதியம் என்றால் $7.50 /ஒரு மணிநேரத்துக்கும் மாத ஊதியம் என்றால் $1,400/ ஒரு மாதத்துக்கும் இதில் எது குறைவோ அதை தேசிய கலை மன்றம் கொடுக்கும். விவரங்களுக்கு பின்னிணைப்பு Bஜப் பார்க்கவும்.

     பயிற்சிக்கு அனுப்பப்படும் ஊழியரின் அண்மைய ஊதிய ரசீதை தேசிய கலை மன்றம் கேட்கக் கூடும்.

2. வரையறுக்கப்பட்ட திட்டத்துக்கு பயிற்றுவிப்பாளரை நிறுவனங்கள்

- **பயிற்றுவிப்பாளர் கட்டணம்**
  வரையறுக்கப்பட்ட திட்டத்துக்கு பயிற்றுவிப்பாளரை நிறுவனம் நியமிக்கும் போது இது பொருந்தும்

- **மேற்பார்வையாளர்/வழிகாட்டியின் மதிப்பூதியம்**
  நடவடிக்கை அல்லது திட்டத்தில் கற்றலுக்கு உதவும் தொழில்முறை வழிகாட்டியை நீங்கள் நியமித்துக்குக் கொள்ள ஒரு குறிப்பிட்ட தொகை இது. பின்னிணைப்பு Aஐப் பார்க்கவும்.

- **பயிற்சி நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்யும் போது ஆகும் உள்கட்டுமான, பொருட்களுக்கான செலவுகள்**

  **வளாகத்துக்கான வாடகை**
  பயிற்சி, நடவடிக்கை ஏற்பாடு செய்யப்படும் வளாகத்துக்கான வாடகை இதில் அடங்கும். ஏற்கெனவே தேசிய கலை மன்றத்தின் குடியிருப்புத் திட்ட, கலைகளுக்கான இடத்தைப் பயன்படுத்தும் பயிற்சி/ நடவடிக்கைகளுக்கு வாடகை அளிக்கப்பட மாட்டாது.

- **பொருட்கள் / உள்கட்டுமான செலவுகள்**
  பயிற்சி, நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்ய அச்சிடப்படும் பொருட்களுக்கான செலவுகள், வளாகத்தில் ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ள உள்கட்டுமான மேம்பாட்டுக்கான செலவுகள் இதில் வரும்.

- **சந்தைப்படுத்தும் செலவுகள்**
  பயிற்சி, நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்ய அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படும் சந்தைப்படுத்தும் செலவுகள் இதில் வரும். நிறுவனத்துக்கு வெளியில் உள்ள பங்கேற்பாளர்கள் பங்கேற்கும் நடவடிக்கைகளுக்கு மட்டும் இது பொருந்தும். நிறுவனத்துக்குள், ஊழியர்கள்/உறுப்பினர்களுக்காக நடக்கும் நடவடிக்கை, பயிற்சிகளுக்கு இது பொருந்தாது.

- **கூடுதல் மனிதவள செலவுகள்**

  பயிற்சி, நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்யத் தேவைப்படும் தற்காலிக ஊழியர், கூடுதல் பணி ஊதியம், பணி சார்ந்த அல்லது கூடுதல் நேரத்தைப் பொறுத்த கூடுதல் ஊதியம்/கட்டணம் கூடுதல் மனிதவள செலவுகளுக்கு இது பொருந்தும். ஆனால், ஏற்கெனவே தேசிய கலை மன்றத்தின் முக்கிய நிதியுதவியின் கீழ் பணியாற்றும் ஊழியர்களுக்கு திறன் மேம்பாட்டு நிதியுதவியின் கீழ் ஆதரவு கிட்டாது. ஊதியம்/கட்டணம் வழங்கப்பட்டதற்கான முறையான இணை ஆவணங்கள் கோரப்படலாம்.

- **ஊழியரின் பயிற்சிக் கட்டணத்தில் 70% வரைக்கும், அதாவது $1,400 வரை தேசிய கலை மன்றம் வழங்கும்.**

  ஊழியரை நிறுவனம் திட்ட நடவடிக்கை தவிர பயிலரங்கு, வெளிநாட்டுப் பயிலரங்குகள் போன்ற கூடுதல் நடவடிக்கைகளுக்கு அனுப்பினால் தேசிய கலை மன்றம் ஆதரவளிக்கும். ஊழியர் பணிக்குச் செல்லாததற்கான ஈட்டுத் தொகை இதில் வராது. விவரங்களுக்கு பின்னிணைப்பு Bஐப் பார்க்கவும்.

  (i) பயிற்சி பெறுவோர், தொழில் கற்போர், பணியிடப்பயிற்சி பெறுவோர் எந்த அளவிற்கு சிறப்பாகப் பணியாற்றியுள்ளனர்.

  (ii) அந்தக் கூடுதல் நடவடிக்கை திட்ட நடவடிக்கையுடன் எந்த அலவிற்கு ஒத்துப் போகிறது.

3. **வெளிநாட்டில் ஏற்பாடு செய்யப்படும் நடவடிக்கை அல்லது பயிற்றுவிப்பாளர் வெளிநாட்டில் வசிப்பவர் என்றால்**

- நடவடிக்கை, திட்ட வளாகத்திற்குப் போய் வரும், வந்து செல்லும் விமானக் கட்டணம், ரயில் கட்டணம், சாலைப்போக்குவரத்துக் கட்டணம், படகுக் கட்டணம்
- உபகரணங்கள், பொருட்களை நடவடிக்கை வளாகத்திற்குக் கொண்டு செல்லும் போக்குவரத்துச் செலவு. நடவடிக்கை, திட்டத்துக்கு மிகவும் இன்றியமையாதது என்றால் மட்டுமே இது வழங்கப்படும்.
- விசா
- பயணக் காப்பீடு
- தங்குமிடம்

- நடவடிக்கை, திட்டம் தொடங்குவதற்கு முந்தைய நாள் முதல் இரவு முதல் இறுதி நாள் இரவு வரை நிதியுதவி கிடைக்கும். எ.கா. டிசம்பர் 2ஆம் தேதி நடவடிக்கை/திட்டம் தொடங்கி டிசம்பர் 5ஆம் தேதி முடியுமென்றால் டிசம்பர் 1ஆம் தேதி இரவுக்கு வேண்டிய தங்குமிடச் செலவு நிதியுதவியில் அடங்கும். டிசம்பர் 5ஆம் தேதி இரவு நிதியுதவியில் அடங்காது.

- அன்றாடச் செலவுகள் , உணவு, போக்குவரத்துச்செலவுகள்

4. நிதியுதவி கிடைக்காத செலவுகள்

- சொத்துகளின் செலவு (எ.கா. கணினி வன்பொருள், வாகனம், அறைகலன், இசைக்கருவி )
- ஏற்கெனவே தேசிய கலை மன்றம் அல்லது வேறு அரசாங்க அமைப்பின் மானியம் பெற்ற பயிற்சி ஊழியர் பணிக்குச் செல்லாததற்கான ஈட்டுத் தொகை நடவடிக்கைகள், திட்டங்களுக்கு (எ.கா. பயிற்சிக்கட்டணம்,)

# பகுதி 2: தகுதிகள்

**திறன் மேம்பாட்டு நிதியுதவித் திட்டம் எதை ஆதரிக்கிறது?**

இந்த நிதியுதவி 12 மாதங்களுக்கு மேல் நீட்டிக்காத பயிற்சி நடவடிக்கைகளை ஆதரிக்கிறது.

நீங்கள் ஒரு கலை நிறுவனமாக இருந்தால், உங்கள் அலுவலர்களை மேம்படுத்தும் நடவடிக்கைகளை ஆதரிக்கவும், உங்கள் நிறுவனத்திற்கு புதிய திறனாளர்களை உருவாக்கவும் இந்த நிதியுதவித் திட்டம் துணைபுரியும். எடுத்துக்காட்டாக:

- நிறுவனத்திற்கு உள்ளேயே பயிற்சி (எ.கா. நிபுணர்களை அல்லது பயிற்றுவிப்பாளர்களை அமர்த்துதல்)
- அலுவலர்களுக்குப் பணி இணைப்பு (மற்ற உள்ளூர், வெளிநாட்டு அமைப்புகளோடு இணைப்பது)
- மாணவப் பயிற்சியாளர் திட்டங்கள் (எ.கா. மாணவர்களுக்கும் வேலை மாறுவோருக்கும், செய்யும் வேலையிலேயே கற்றுக்கொள்ளும் வாய்ப்புகள்)*
- அறிவுரையளிப்பு மற்றும் தொழில் பயிற்சியாளர் திட்டங்கள் *

நீங்கள் தனிப்பட்ட கலைப் படைப்பாளராக அல்லது நிபுணராக இருந்தால், உங்கள் பணிக்கு அவசியமான திறன்களையும் அறிவாற்றலையும் பெறுவதற்கு நீங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை இந்த நிதியுதவி ஆதரிக்கும். அவை கட்டமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்களாக, அல்லது உங்களுக்காகவே வகுக்கப்பட்ட நடவடிக்கைகளாக இருக்கலாம், எடுத்துக்காட்டாக:

- நிபுணத்துவ டிப்ளோமா / சான்றிதழ் வகுப்புகள்
- மாநாடுகள் / கருத்தரங்குகள்
- பயிலரங்குகள் / திறனாளர் வகுப்புகள்
- தங்கிப் பணிபுரிதல்கள்
- பணி இணைப்புகள்
- அறிவுரையளிப்பு / தொழில் பயிற்சியாளர்*

* அறிவுரையளிப்பு, தொழில் பயிற்சியாளர், வேலையிலேயே கற்றுக்கொள்ளல் நடவடிக்கைகளுக்கு, ஒவ்வொருவருக்கும் தனியாக வடிவமைக்கப்பட்ட ஆதரவு பெறலாம்

1 - உங்கள் நடவடிக்கைக்கு பல பாடத்திட்டங்கள் உள்ளன என்றாலும் (எ.கா: ஒவ்வொரு பாடத்திட்டத்திலும் பல்வேறு பங்கேற்பாளர்கள் இருக்கலாம் அல்லது அதே பங்கேற்பாளர்(கள்), கீழிருந்து மேல் வரைக்கும் பல நிலைகளில் உள்ள பாடத்திட்டங்களில் படிப்படியாக பங்கேற்கலாம்) அல்லது 12-மாதங்களுக்கு மேற்பட்டு நீடித்தாலும் (எ.கா: 18-மாத நிபுணத்துவ டிப்ளோமா பாடத்திட்டம்), உங்கள் முதல் பாடத்திட்டத்தின் முடிவில் அல்லது 12 மாதங்கள் முடிவில், இதில் எது முன்னதோ அப்போது, உங்கள் நடவடிக்கையின் பலன்கள் மற்றும் திறமை ஆகியவற்றை மறுபரிசீலனை செய்த பிறகே, உங்கள் நடவடிக்கைக்கு தொடர்ந்து நிதியுதவி அளிப்பது பற்றி தேசிய கலை மன்றம் முடிவெடுக்கும்.

***திறன் மேம்பாட்டு நிதியுதவித் திட்டம் எதை <u>ஆதரிக்கவில்லை</u>?***

ஏற்கனவே தேசிய கலை மன்றத்தின் மற்ற திட்டங்களாலோ, அல்லது மற்ற அரசாங்க அமைப்புகள் வழங்கும் பயிற்சி ஆதரவாலோ, உங்களது நிபுணத்துவ மேம்பாட்டிற்கு, நிதி கிடைத்திருக்கலாம் என்பதால், கீழே உள்ளவைகளை, திறன் மேம்பாட்டு நிதியுதவித் திட்டம் ஆதரிக்கவில்லை:

- முழுநேர இளநிலை அல்லது முதுநிலை பட்டப்படிப்பு (மாறாக தேசிய கலை மன்ற உபகாரச் சம்பளத்திற்கு விண்ணப்பிக்கவும்);
- ஏதேனும் அரசாங்க அமைப்பால் நிதியுதவி அளிக்கப்பட்ட பயிற்சி நடவடிக்கைகள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றில் நிதியுதவிக்கு உள்ளடக்கப்பட்ட செலவினங்கள் (எ.கா பயிற்சிக் கட்டணம், பயிற்சி பெறுபவரின் வேலைக்கான சம்பளம்).

*** உங்கள் நடவடிக்கை தேசிய கலை மன்ற நிதியுதவிக்குத் தகுதி பெறுகிறதா என உங்களுக்கு உறுதியாகத் தெரியாவிட்டால், www.nac.gov.sg/grants/contact என்னும் இணையதளத்தில் பட்டியலிடப்பட்டிருக்கும் தேசிய கலை மன்ற அதிகாரிகளில் ஒருவருடன், தயவு செய்து, பேசவும்.**

- குழு அல்லது குழுமங்களின் பெரும்பான்மையினர் சிங்கப்பூரர்கள் அல்லது நிரந்தரவாசிகளாக இருப்பது அல்லது குழுவினரின் சட்ட, நிதிப் பொறுப்பை விண்ணப்பிப்பவர் ஏற்பது.

**யார் இதற்கு விண்ணப்பிக்க முடியாது?**

- சமயம் சார்ந்த இலக்குகளைக் கொண்ட நிறுவனம்
- நிலுவையில் இருக்கும் தனிநபர் அல்லது நிறுவனத்தின் தேசிய கலை மன்றத்தின் பழைய நிதியுதவித் திட்டத்தின் மதிப்பீட்டு அறிக்கைகள்.
- விண்ணப்பிக்கும்போது தேசிய கலை மன்றத்திடம் கடன் பாக்கி வைத்திருக்கும் தனிநபர் அல்லது நிறுவனம்.

# பகுதி 3: விண்ணப்பம் மற்றும் பரிசீலனை முறைகள்

**திறன் மேம்பாட்டு நிதியுதவித் திட்டத்திற்கு எவ்வாறு விண்ணப்பம் செய்வது?**

https://stars.nac.gov.sg என்னும் இணையதளத்தில் உங்கள் விண்ணப்பங்களைப் பெறலாம். கூடுதல் விவரங்களும் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

தயவுசெய்து, உங்கள் விண்ணப்பத்தை NAC_capabilitydevt_grant@nac.gov.sg என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். .

**உங்கள் விண்ணப்பத்தை அனுப்புவதற்குமுன், பின்வருபவை இணைக்கப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தவும்:**

- நிதியுதவித் திட்ட விண்ணப்பப் படிவம்
- சம்பந்தப்பட்ட முக்கிய தரப்பினரின் சுய விவரத்தொகுப்பு
- திறன் மேம்பாட்டு நடவடிக்கை / திட்டம் குறித்த விவரக்குறிப்பு
- வரவுசெலவுத் திட்டம்

***நீங்கள் எந்தத் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்?***

திறன் மேம்பாட்டு நிதியுதவித் திட்டத்திற்கு **ஆண்டுக்கு ஆறு முறை** விண்ணப்பம் செய்யலாம். உங்கள் விண்ணப்பத்தைத் தயார்செய்யும்போது நீங்கள் நினைவில் கொள்ளவேண்டிய முக்கிய தேதிகளும் காலகட்டங்களும் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன:

| இந்தத்தேதிகளுக்கு இடையில் அல்லது பிறகு நடைபெறும் திட்டங்கள்: | விண்ணப்பத்துக்கான கடைசி தேதி | முடிவு அறிவிப்பு |
|---|---|---|
| 15 ஜூலை - 14 செப்டம்பர் | 15 ஏப்ரல் | 15 ஜூன் |
| 15 செப்டம்பர் - 14 நவம்பர் | 15 ஜூன் | 15 ஆகஸ்ட் |
| 15 நவம்பர் - 14 ஜனவரி | 15 ஆகஸ்ட் | 15 அக்டோபர் |
| 15 ஜனவரி - 14 மார்ச் | 15 அக்டோபர் | 15 டிசம்பர் |
| 15 மார்ச் - 14 மே | 15 டிசம்பர் | 15 பிப்ரவரி |
| 15 மே - 14 ஜூலை | 15 பிப்ரவரி | 15 ஏப்ரல் |

அனைத்து விண்ணப்பங்களும் **விண்ணப்பத்துக்கான கடைசி தேதியில்** நள்ளிரவுக்கு முன்பு, அதாவது இரவு மணி 23:59 க்கு முன்னால் சமர்ப்பிக்கப்பட வேண்டும். தாமதமாகப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

உறுதிப்படுத்தல், திட்டத்திற்கான அழைப்புக்குக் காத்திருந்தாலும் உரிய தேதிக்குள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும். இருந்தாலும், ஏற்பாட்டாளர்களின் உறுதிப்படுத்தல், திட்டத்திற்கான அழைப்புக்குக் காத்திருப்பதாகக் குறிப்பிட வேண்டும். திறன் மேம்பாட்டு நிதியுதவி உங்களுக்கு வழங்கப்பட்டால் உரிய ஆவணங்களை சமர்ப்பித்த பிறகு முதல்

தவணை நிதியுதவி ஒதுக்கப்படும். (உதாரணம்: உறுதிப்படுத்தல், திட்டத்திற்கான அழைப்புக் கடிதம், ஏற்பக்கடிதம்).

***உங்கள் விண்ணப்பம் எவ்வாறு பரிசீலிக்கப்படும்?***

விண்ணப்பத்தில் கீழ்கண்டவற்றை விளக்க வேண்டும்:

- கலைகளில் உங்களின் பங்கு
- மேம்பாட்டு இலக்குகளில் உங்கள் திறன்கள்
- அந்த இலக்குகலை அடைய திட்டத்தின் போது என்னவெல்லாம் செய்ய இருக்கிறீர்கள்
- உங்கள் திட்ட நடவடிக்கையை எவ்வாறு தொடர்ந்து கண்காணிப்பீர்கள், கற்றவற்றை எவ்வாறு கலைகளில் பொருத்துவீர்கள்

**சம முக்கியத்துவம் கொண்ட பின்வரும் பரிசீலனை விதிகள் எங்கள் பரிசீலனைக்கு வழிகாட்டும்:**

1. திட்ட அறிக்கையில் சொல்லப்பட்ட நிபுணத்துவ மேம்பாடு, கலைத்துறையில் உள்ள இடைவெளியை எவ்வளவு தூரம் குறைக்கும்

    - திட்ட அறிக்கையில் சொல்லப்பட்ட நடவடிக்கையால், பரந்த கலைத்துறைக்கு, விண்ணப்பதாரரால் பலன் ஏற்படும் என்பது தெளிவாகப் புலப்படுகிறதா?
    - கலைத்துறையில் அடையாளம் காணப்பட்ட திறன் இடைவெளியை / கலைத்துறையின் தேவையை, நடவடிக்கை பூர்த்தி செய்கிறதா?

2. திட்ட அறிக்கையில் சொல்லப்பட்ட நடவடிக்கை, விண்ணப்பதாரரின் திறன் மேம்பாட்டு பலன்களை எந்த அளவுக்கு நிறைவேற்றும்.

    - திட்ட அறிக்கையில் சொல்லப்பட்ட நடவடிக்கை எவ்வளவு வலுவானதாகவும் ஒத்திசைவாகவும் உள்ளது?
    - திட்ட அறிக்கையில் சொல்லப்பட்ட நடவடிக்கைகள், சொல்லப்பட்ட குறிக்கோள்களுக்கு எவ்வளவு பொருத்தமானவை?
    - இந்த செயல்முறையில் சம்பந்தப்பட்ட முக்கிய தரப்பினரிடம், திட்ட அறிக்கையில் சொல்லப்பட்ட நடவடிக்கையை முடிப்பதற்குத் தேவையான அனுபவம் / ஆற்றல் இருக்கிறதா?
    - திறன், குறித்தகாலத்தில், திட்டம், வளங்களின் பயன்பாடு, மதிப்பீடு போன்றவற்றின் அடிப்படையில் குறித்த வரவுசெலவுத் திட்டத்தில் நடைமுறைப் படுத்துவது •

3. சிங்கப்பூரின் கலைச் சூழலுக்குப் பங்களிப்பதில் விண்ணப்பதாரரின் கடந்த கால அனுபவமும் ஆற்றலும்

- உள்ளூர் கலைச் சூழலுக்கு பங்களிக்க, விண்ணப்பதாரருக்கு வலுவான கடந்தகால நிபுணத்துவ அனுபவமும் பொறுப்புணர்ச்சியும் இருக்கிறதா?
- உள்ளூர் கலைச் சூழலுக்கு பங்களிக்க, விண்ணப்பதாரருக்கு வலுவான கடந்தகால நிபுணத்துவ அனுபவமும் பொறுப்புணர்ச்சியும் இருக்கிறதா?
- உள்ளூர் சூழலை மேன்மேலும் மேம்படுத்தி, நிலையான பங்களிப்பு வழங்கக்கூடிய ஆற்றலை விண்ணப்பதாரர் வெளிப்படுத்துகிறாரா?

உங்கள் நிதியுதவித் திட்ட விண்ணப்பத்தைத் துரிதப்படுத்த எங்கள் உதவி உங்களுக்குத் தேவைப்பட்டால், தயவுசெய்து, தேசிய கலை மன்ற நிதியுதவித் திட்ட அதிகாரிகளில் ஒருவருடன் பேசவும். உங்கள் கோரிக்கை நியாயமாகவும், எங்கள் சாத்திய வரம்புக்கு உட்பட்டும் இருந்தால் உதவி செய்வோம்.

### *நீங்கள் விண்ணப்பம் செய்த பிறகு என்ன நடக்கும்?*

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தையும் தேசிய கலை மன்றம் தீவிரமாகப் பரிசீலிக்கும். எங்களுக்கு மேல்விவரங்கள் தேவைப்பட்டால், உங்களது தலைமை விண்ணப்பதாரருடன் தொடர்பு கொள்வோம். உங்கள் விண்ணப்பத்தை உள்ளேயே இருக்கும் அல்லது உள் மற்றும் வெளி மதிப்பாய்வாளர்கள் கொண்ட குழு பரிசீலிக்கும். வெளி மதிப்பாய்வாளர்கள் அமர்த்தப்பட்டால், தொழில்துறை ஆலோசகர்கள், வல்லுநர்கள், கலைத்துறையினர் ஆகியோர், பரிசீலனை விதிகளின் அடிப்படையில் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து அவர்களின் கருத்துக்களை அளிப்பார்கள்.

மன்றத்திடம் சமர்ப்பிக்கப்படும் திட்ட அறிக்கைகள் அனைத்தும் அந்தரங்கமாகக் காக்கப்படும் என உறுதியளிக்கிறோம். அதேபோல, எங்களின் மதிப்பாய்வுக் குழுவில் உள்ளவர்களும், உங்கள் விண்ணப்பத்தை பரிசீலிப்பதற்குமுன் அந்தரங்க ஒப்பந்தங்களால் கட்டுப்படுத்தப் படுவார்கள்.

# பகுதி 4: உங்களுக்குத் திறன் மேம்பாட்டு நிதியுதவி வழங்கப்பட்டால்

உங்கள் விண்ணப்பம் வெற்றிபெற்றால், நிதியுதவியின் அளவைப் பொறுத்து, உங்களது அல்லது உங்கள் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட வங்கிக் கணக்கில் இரண்டு அல்லது மூன்று பகுதிகளாக நிதியுதவி சேர்க்கப்படும். கீழ்க்கண்ட அட்டவணையில் சுருக்க விவரம் காணலாம்.

| நிதியுதவி அளவு | முதல் பகுதி | 2வது பகுதி | 3வது பகுதி |
|---|---|---|---|
| $10,000க்கும் குறைவு | நிதியுதவி ஏற்கப்பட்டவுடன் 80% | திட்டப்பணியை வெற்றிகரமாக முடித்து திட்ட அறிக்கை சமர்ப்பித்தவுடன் 20% | - |
| $10,000 அல்லது அதற்கு மேல் | நிதியுதவி ஏற்கப்பட்டவுடன் 50% | திட்டப்பணியை வெற்றிகரமாக முடித்தவுடன் 30% | திட்ட அறிக்கையைத் சமர்ப்பித்தவுடன் 20% |

***உங்கள் முன்னேற்றத்தை தேசிய கலை மன்றம் எவ்வாறு மதிப்பீடு செய்யும்?***

உங்களுடன் தொடர்புகொண்டு, உங்கள் முன்னேற்றத்தைப் புரிந்துகொள்வதில் ஆர்வமுள்ள பொறுப்பு மேலாளர் தேசிய கலை மன்றத்தில் இருப்பார். உங்கள் நடவடிக்கை 12 மாதங்களுக்கு மேல் நீடித்தால், உங்களைச் சந்தித்து உங்கள் நடவடிக்கையின் கற்றல் பலன்களை மறுஆய்வு செய்த பிறகு, நிதியளிப்பு தொடரப்படுமா என்பதைப் பரிசீலிப்போம்.

***உங்கள் திட்டப்பணி நிறைவடைந்ததும் என்ன நடக்கும்?***

- உங்கள் திட்டப்பணியை முடித்தவுடன், சுய மதிப்பீட்டு அறிக்கை மற்றும் கணக்கு அறிக்கைகள் கொண்ட திட்டப்பணி அறிக்கையைத் சமர்ப்பிக்குமாறு உங்களிடம் கேட்டுக்கொள்ளப்படும். (தேசிய கலை மன்ற விண்ணபப்படிவத்தில்).

- நடவடிக்கைகள், திட்டங்களுக்கு ஏற்பாடு செய்யும் ஏற்பாட்டாளர்கள் பங்கேற்போரை அணுக்கமாக கவனித்து நிறுவன மதிப்பீட்டு அறிக்கையுடன் கருத்துக் கணிப்புப் படிவங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

- நிறுவனங்களுக்கான மதிப்பீட்டு அறிக்கை (நிறுவனங்களுக்கு)

- ஒரு மேற்பார்வையாளரின் /வழிகாட்டியின் அறிக்கையும் எங்களுக்குத் தேவைப்படும். (வழிகாட்டுதல், கற்றல், பணியிடக் கற்றல்)

- இறுதிக் கணக்கறிக்கை

- புகைப்படங்கள், காணொளிப் படங்கள் போன்ற நீங்கள் பகிர்ந்துகொள்ள விரும்பும் ஏதேனும் பொருட்களும் எங்களுக்குத் தேவை. தேவைப்பட்டால் பொதுவாக, எழுத்துபூர்வமான அறிக்கையும், அதனுடன் புகைப்படங்கள், காணொளிப் படங்கள் போன்ற நீங்கள் பகிர்ந்துகொள்ள விரும்பும் ஏதேனும் பொருட்களும் எங்களுக்குத் தேவை. தேவைப்பட்டால், ஒரு கருத்துப்பகிர்வு அமர்வை நடத்துமாறும் தேசிய கலை மன்றம் உங்களிடம் கேட்டுக் கொள்ளக்கூடும். இதனால், நீங்கள் கற்றுக்கொண்டதிலிருந்து உங்கள் சமூகத்திலிருக்கும் சகாக்களும் பயனடைவார்கள். நீங்கள் வேறு விதமாக உங்களை வெளிக்காட்ட விரும்பினால், எங்களிடம் கலந்து பேசுங்கள். உங்களது நிபுணத்துவ மேம்பாட்டுக்கு, திட்ட நடவடிக்கை எவ்வாறு பங்களித்திருக்கிறது என்பதை நன்கு புரிந்துகொள்ள, தேசிய கலை மன்றம் உங்களுடன் தொடர்புகொண்டு, உங்கள் கற்றல் அனுபவம் குறித்த ஒரு கருத்துக் கணிப்பை பூர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்ளலாம்.

# பின்னிணைப்பு A: மேற்பார்வையாளர்கள் / வழிகாட்டிகள், பணியிடப் பயிற்சிகள்

மேற்பார்வை / வழிகாட்டி என்றால் என்ன? அனுபவம் மிக்கவர், அனுபவம் குறைந்தவர் ஆகிய இருவேறு தனிநபர்களுக்கு இடையே தனிப்பட்ட முறையில் ஏற்படுத்தப்படுவது. இதுவும் தொழில்முறையானது என்ற போதிலும் முறையான ஒப்பந்தம் எதுவும் இல்லாமல், ஊதியம் இல்லாமல், எதிர்கால வேலை வாய்ப்பு இல்லாமல், முறையான சான்றிதழ் இல்லாமல் இருக்கும். புத்தாக்கமும் கலையும் உள்ள இடங்களில் பயிற்சிக்காக இது போன்ற ஏற்பாடுகள் செய்யப்படுவதுண்டு.

பணியிடப் பயிற்சி என்றால் என்ன? நிறுவனம் ஒன்றுடன் இணைக்கப்பட்டு பணியிடங்களில் கற்றல் பயிற்சி அளிக்கப்படும். இது போன்ற மேற்பார்வை / வழிகாட்டி ஏற்பாட்டைக் காட்டிலும் சற்றே முறையானது. சில சமயம் பிற துறைகளிலோ வெளிநாட்டிலோ கூட பயிற்சி ஏற்பாடு செய்யப்படும். தொழில்முறை வல்லுநர்கள் மேற்பார்வைக்குப் பிறகு முறையான சான்றிதழ் வழங்கப்படும். மேற்பார்வை / வழிகாட்டி ஏற்பாட்டைப் போன்றது தான் என்றாலும் விளைவுகள், பயிற்சி நேரம் போன்றவை தேவையான இடங்களில் முக்கியமாகும். தொழில்முறை வல்லுநர்கள் மேற்பார்வைக்குப் பிறகு முறையான சான்றிதழுக்கும் வழிவிடும். பயிற்றுவிப்பாளருக்கு தகுதியும் சான்றிதழும் இருந்தால், அவர் தொழில்முறையாக கட்டணம் கேட்கத் தகுதி பெறுவார்.

# பின்னிணைப்பு B: ஊழியர் பணிக்குச் செல்லாததற்கான ஈட்டுத் தொகை, பயிற்சி சலுகை

**ஊழியர் பணிக்குச் செல்லாததற்கான ஈட்டுத் தொகை உங்கள் நிறுவனத்துக்குக் கிடைக்க எங்களால் உதவ முடியும்**

**பயிற்சி சலுகை பெறத் தகுதியுடைய தனிநபர்கள்:**

- சிங்கப்பூரர்கள் நிரந்தரவாசிகள்;
- பகுதியாகவோ முழுமையாகவோ உங்கள் நிறுவனம் ஏற்கும் கட்டணம் (உதாரணம்: பயிற்சிக் கட்டணம்);
- உங்கள் நிறுவனத்தின் முழுநேர, பகுதிநேர ஊழியர்கள்
- பயிற்சி காலத்தில் தொடர்ந்து ஊதியம் பெறும் ஊழியர்கள்;

**வழங்கீடுகள்**

ஊழியரின் மாத, மணிநேர ஊதியத்தில் 70% வரைக்கும் அல்லது மணிநேர ஊதியம் என்றால் $7.50 /ஒரு மணிநேரத்துக்கும் மாத ஊதியம் என்றால் $1,400/ ஒரு மாதத்துக்கும் இதில் எது குறைவோ அதை தேசியக் கலை மன்றம் கொடுக்கும். பயிற்சிக்கு அனுப்பப்படும் ஊழியரின் அண்மைய ஊதிய ரசீதை தேசிய கலை மன்றம் கேட்கக் கூடும்.

**பயிற்சி தொகை**

வேலையில் கற்பதற்கு நிறுவனம் தேர்ந்தெடுக்கும் ஊழியருக்கு தேசிய கலை மன்றம் பயிற்சி தொகை மானியம் அளிக்கும்.

**இதற்குத் தகுதி பெற:**

**தகுதி**

- சிங்கப்பூர் அல்லது நிரந்தரவாசி;
- பணியில் இருக்கும் காலத்தில் ஊதியம் பெறும் உறுப்பினர்கள்
- நிறுவத்தில் முறையான முழுநேர அல்லது பகுதிநேரப் பணியில் இருப்பது

**வழங்கீடுகள்**

பயிற்சி பெறும் ஊழியரின் மாத, மணிநேர ஊதியத்தில் 70% வரைக்கும் அல்லது மணிநேர ஊதியம் என்றால் $7.50 /ஒரு மணிநேரத்துக்கும் மாத ஊதியம் என்றால் $1,400/ ஒரு மாதத்துக்கும் இதில் எது குறைவோ அதை தேசிய கலை மன்றம் கொடுக்கும். பயிற்சிக்கு அனுப்பப்படும் ஊழியரின் அண்மைய ஊதிய ரசீதை தேசியக் கலை மன்றம் கேட்கக் கூடும்.

பயிற்சி பெறுவோர், தொழில் கற்போர், பணியிடப்பயிற்சி பெறுவோர் கூடுதல் நடவடிக்கைகளுக்குச் சென்றால் திறன் மேம்பாட்டு நிதியுதவி ஆதரவளிக்குமா?

12 மாதங்களுக்கு மிகாமல் இருந்தால் திட்ட நடவடிக்கையுடன் (பயிலரங்கு, வெளிநாட்டுப் பயிலரங்கு) கூடுதல் நடவடிக்கைகளுக்கு திறன் மேம்பாட்டு நிதியுதவி ஆதரவளிக்கும். உங்கள் நடவடிக்கைக்கு தொடர்ந்து நிதியுதவி அளிப்பது பற்றி தேசிய கலை மன்றம் முடிவெடுக்கும்:

(i) பயிற்சி பெறுவோர், தொழில் கற்போர், பணியிடப்பயிற்சி பெறுவோர் எந்த அளவிற்கு சிறப்பாகப் பணியாற்றியுள்ளனர் .

(ii) அந்தக் கூடுதல் நடவடிக்கை திட்ட நடவடிக்கையுடன் எந்த அளவிற்கு ஒத்துப்போகிறது.